DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.51/2017**

Deposition of Witness :  DW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | த/பெ. | : | இராமசாமி |
| கிராமம் | : | பாலமேட்டுபுதூர் | தாலுகா | : | கொடுமுடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 67 |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 17-09-2025.</u>

<u>குறுக்கு  விசாரணை தொடர்ச்சி ( சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)</u>

தாவாசொத்தின் கதவு எண்.53 ஆகும். தாவா சொத்தின் பழைய கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் ஒரே மின் இணைப்புதான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் அசல் மின் கட்டண ரசீது தாவா சொத்தில் உள்ள அந்த மின் இணைப்பிற்கானது என்றால் இல்லை. தாவா சொத்தின் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சாட்சி பின்னிட்டு 1052 என்று சாட்சியம் அளிக்கிறார். வாதிகள் தாவா சொத்துக்களின் மின் இணைப்பு எண்களை பிராதில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.19 எனது பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில்  மின் இணைப்பு எண்.1052 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.19 கிரைய ஆவணத்தில் 04-044-011-1052 என்று மின் இணைப்பு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 04-044-011-1342 என்பது தான் தாவா சொத்தின் சரியான மின் இணைப்பு எண் என்றால் இரண்டு மின் இணைப்புகள் இருந்தது, ஆனால் ஒரு மின் இணைப்பு எண்ணைத்தான் எனது கிரைய பத்திரத்தில் காட்டினார்கள், இந்த மின் இணைப்பு எண் சரியானது தானா என்று எனக்கு தெரியவில்லை. இன்றைய தேதியில் தாவா சொத்திற்கு இரண்டு மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு மின் இணைப்புகளும் இன்றைய தேதிவரை 1ம் வாதி மணி பெயரில் தான் உள்ளது என்றால் தவறு, எனது பெயரில் தான் இருந்து வருகிறது. என்னிடம் காட்டப்படும் அசல் மின் ரசீதில் உள்ள மின் இணைப்பு எண்ணைத்தான் எனது கிரைய பத்திரத்தில்

காட்டவில்லை. அந்த மின் இணைப்பு ரசீது தாவா சொத்திற்குரியது தான் என்றால் சரிதான். அந்த 15-09-2025 தேதியிட்ட அசல் மின் கட்டண ரசீது **வாசாஆ.42** ஆகும். இன்றைய தேதிவரை என்னால் தாவா சொத்திற்கு மாதாந்திர மின் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் மூன்று முறை நான் செலுத்தியுள்ளேன். அவ்வாறு நான் மூன்று முறை மின் கட்டணம் செலுத்தினேன் என்பதை நிரூபிப்பதற்கு மின் கட்டண ரசீதுகளை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூன்று முறை நான் மின் கட்டணம் செலுத்தியதாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் எனக்கு தெரியாது. கிரையதேதியில் இருந்து இன்றையதேதி வரை வாதிகள் தான் தாவா சொத்திற்கான மின் கட்டணங்களை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான், நான் மூன்று முறை தான் கட்டினேன். நான் வழக்கு சொத்தை வாதிகளுக்கு வாடகைக்கு விட்டிருந்தேன், ஆனால் அவர்கள் வாடகை கொடுக்கவில்லை. கிரையம் எழுதிய பிறகுதான் நான் வழக்கு சொத்தை வாடகைக்கு விட்டேன். வாய்மொழி வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வாடகைக்கு விட்டேன். மாத வாடகை ரூ.2,800/- ஆகும். வாடகையை மாதா மாதம் செலுத்தவேண்டும். வாடகையை கேட்டு நான் வாதிகளுக்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதிகள் இன்றைய தேதிவரை தொடர்ந்து வாடகைதாரராகத்தான் இருந்துவருகிறார்கள். வாதிகளை வெளியேற்றுவதற்காக வாடகைகட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் வாடகைதாரர்களாக இருந்து வருகிறார்கள் என்ற சங்கதியை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் வாதிகள் வாடகைதாரர்களாக இருந்து வருகிறார்கள் என்ற சங்கதியை எனது எழுத்து மூலமான நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளை வாடகைதாரர்கள் என்று நான் சொல்லிவரும் நிலையில் அவர்களுக்கு சட்டபூர்வமான வகையில் அறிவிப்பு கொடுத்து அதன்பிறகு சட்டப்பூர்வமான வகையில் அவர்களை வெளியேற்றிய பிறகுதான் நான் சொத்தின் சுவாதீனம் அடைய முடியும் என்றால் சரிதான். வாடகைதாரர்களாக வாதிகள் குடியிருந்து வரும் அடிப்படையில் அவர்கள் மின் கட்டணங்களை செலுத்திவருகிறார்கள். வாதிகள் குடியிருந்து வருவதால்

அவர்களால் சொத்து வரி செலுத்தப்பட்டு வருகிறது என்றால் தவறு, நான்தான் சொத்து வரி செலுத்தி வருகிறேன். சுமார் 2 முறை நான் சொத்து வரி செலுத்தியிருப்பேனா என்றால் கிரையத்தேதியில் இருந்து இன்று வரை நான்தான் சொத்துவரி செலுத்திவருகிறேன். எத்தனைமுறை அவ்வாறு நான் சொத்துவரி செலுத்தியுள்ளேன் என்றால் 2016ம் வருடத்தில் இருந்து தற்போது வரை வருடாவருடம் செலுத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் சொத்துவரி ரசீது தாவா சொத்திற்கானது என்றால் சரிதான். அந்த 18-08-2025 தேதியிட்ட சொத்துவரி ரசீது **வாசாஆ.43** ஆகும். மனோகரன் மனைவி இந்துமதி என்பவரை எனக்கு யார் என்று தெரியாது என்றால் தவறு அவரை எனக்குத்தெரியும். வாதிகளுக்கும், மனோகரன் மனைவி இந்துமதிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளிடம் தாவா சொத்தின் ஒரு பகுதியில் இந்துமதி வாடகைக்கு இருந்தார் என்றால் வாடகைக்கு இருக்கவில்லை, போக்கியத்திற்கு இருந்தார். அவ்வாறு போக்கியத்திற்கு இந்துமதி இருந்தசமயத்தில் தான் நான் கிரையம் பெற்றேனா என்றால் நான் சொத்தை கிரையம் பெற்ற பிறகுதான் என்னிடம் இந்துமதி போக்கியத்திற்கு இருந்தார். இந்துமதி போக்கியத்திற்கு இருந்த சொத்திலும் தற்போது வாதிகள்தான் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம்வாதி மணி என்பவருக்கு செல்வகுமார் என்ற மகன் இருந்து திருமணம் ஆகாமல் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். 2ம்வாதி முருகேசனின் மனைவி சத்யா என்பவர் தற்கொலை செய்து இறந்துபோய்விட்டார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. 2ம்வாதி முருகேசனுக்கு கனிஷ்கா, நிரஞ்சன் என்ற இரண்டு குழந்தைகள் உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கனிஷ்கா மற்றும் நிரஞ்சன் ஆகியோர்களின் தாயார் இறந்துபோய்விட்டதால் அவர்களது தாயார்வழி தாத்தா மூலம் தலா ரூபாய் ஐந்துலட்சம் வீதம் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் எனது கிரையத்திற்கு முன்பு நடந்தது எதுவும் எனக்கு தெரியாது. அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்டதற்கான முச்சலிக்கா இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் என்னஎன்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தைப்பொறுத்து 1ம்வாதி மணி

என்பவர் மணிவண்ணன் என்பவருக்கு அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து கடன் பெற்றார் என்றால் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு நடந்த விபரங்கள் எதுவும் எனக்குத்தெரியாது. 1ம்வாதி தாவா சொத்தை கனராவங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் நான் கிரையம் பெறுவதற்கு முன்பு நடந்தவைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 1ம்வாதி மணி என்பவர் கனகசுந்தரம் மற்றும் லோகநாதன் ஆகியோர்களிடம் கடன் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன், கடன்கள் எல்லாம் ரத்தாகியிருந்தது, வில்லங்கங்கள் எதுவும் இல்லை. அந்த வில்லங்கசான்றிதழை வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அந்த வில்லங்கசான்றிதழ் உள்ளதா என்று தற்போது தேடிபார்த்தால்தான் தெரியும்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின்வேண்டுகோலுக்கிணங்க செலவுதொகை ரூ.500/- சாட்சிக்கு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடனும், அடுத்த வாய்தாவில் முழுமையாக குறுக்குவிசாரணை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. District Judge, Erode.